அசல்

11.1.23 நாகலிங்கத் தம்பிரான்

அசல் — 1 ✓

உ

சிவமயம். ஸ்ரீ காசி

ஸ்ரீமது ஸ்ரீ வேதமூர்த்திகளாகிய 11-1-23

ஐயர்வாள் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு
அடியேன் நாகலிங்கத்தம்பிரான் மிருந்தவணக்கத்துடன்
திக்குநோக்கி அநேகங்கோடி வந்தனங்கள் செய்து
எழுதிக்கொள்ளும் அதிவிநய விஞ்ஞாபனம்.

சுவாமிகளது ஆசீர்வாதத்தால் இவ்விடம் க்ஷேமம்
அவ்விடம் க்ஷேமங்களையடிக்கடித் தெரிய அவாவுகிறேன்

அடியேன் சுவாமிகளைப் பணிசெய்யாற்றிருந்த
சில தினங்களுக்கெல்லாம், காசிவாசஞ்செய்ய வேணுமென்னும்
ஆசையால் ஸ்ரீலஸ்ரீ. திருப்பனந்தாள் எஜமான் அவர்களிடத்தில்
உத்திரவு பெற்றுக்கொண்டு இங்குவந்துவிட்டேன்.

அடியேன் இங்கு காசிமடம் வாசத்திற்கிருந்துவருக்கும்
பொழுது சில சிவநேசச் செல்வர்கள் எனது வன்மை
நோக்காது, காசிமடம் வசனமாயிருந்தால் பிரயோசனகாரமாயிருக்குமாதலால்,
நீ, எளிய வாசகமாயெழுதவேண்டுமென்றனர். அடியேன், எனக்கு அவ்வளவு பண்டிதத்திறமையில்லையென்று
பலகால் கூறியும் அவர்கள் கேளாமற்
பிடிவாதஞ் செய்தார்கள். அதனால், ஆறுமுகப் பிரானன்றியிவ்விடை வேறுதுணையில்லையென்று
அவனது திருவருளை முன்னிட்டு ஒருவாறு எழுதத்துணிந்தேன்.

அதுகண்ட அவர்கள், காசிமடத்தில் காலஞ்சென்றவர் முதலானவர்களுக்குத்
துதியில்லாதிருப்பதால் அவற்றையும் இயற்ற
வேண்டுமென்றனர். அடியேனுக்குப் பாக்கள் செய்யும் பழக்கமில்லாதிருந்தும்
அவர்களது மனத்திருப்தியடையும்பொரு

அசல்

11.1.23 நாகலிங்கத் தம்பிரான்

அசல் – 1

ட்டு. சிற்றறிவுக்குத் தோன்றியதைத் தாறுமாறுமாய்க் குறிலாயினேன்.

அடியேன் சுவாமிகளையடுத்துத் திருத்தருளப் பாக்கியமில்லையாயினும், இந்நூலேனும் அச்சிடுவதன்முன் சுவாமிகளாற் சீர்திருத்தமாக வேணுமென்னும் அவாவுள்ளவனாய்ப் பாயிரத்தில் புதிதாய்ச் சேர்த்துள்ள செய்யுட்களையும், வசனத்தில் நாலு அத்தியாயங்களையும் எழுதியனுப்பினேன். அவற்றில், மாற்றரிய-என்னுங் காப்புமட்டும் பழைய செய்யுள். சுவாமிகள் அடியேன் மீது கருணைகூர்ந்து அவற்றைப் பரிசோதித்து வழுக்களைக் களைந்து நன்கமைத்து, துதிகளுக்கி யாருக்குண்முறை தவறியிருந்தால் ஒழுங்குபடுத்தியனுப்புவதுடன் மற்றைய அத்தியாயங்களைப் பார்வையிடச் சாவதானமுள்ள காலத்தைத் தெரிவிக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

இந்நூலைச் சீர்திருத்தற் பொருட்டு அடியேன் சுவாமிகளிடத்தில் நேரில் வரலாமென்றால்

“அறத்தினிருப்பிடமாகிய காசியடைந்தோர்கள்
வெறுத்தறிவில்லவர் போலது தன்னைவிடுத்தக்கான்
மறுத்து நினைத்திடு லெய்துவதெங்ஙனமாசின்றித்
திறப்படமுத்தி விளைந்தவர் விட்டயல் செல்லாரோ

இத்தலமெய்தியுளோர் யாருமிளைப்பாறு
வுத்தரியங்கொடு மாதுமையேசிட அமையோர்பால்
வைத்தவரும்பொருள் மேவருதாரகமென்றோதி
முத்தியளித்திடுமிப்பதியாற் விடமுயல்வாரோ.

அசல்

11.1.23 நாகலிங்கத் தம்பிரான்

அசல் — 1

மதிறந்தடைப் பில்லா வாயிலோரைம்பாற் செறிந்
த தோற்றுருத்தியினுள் – துறைந்திடும் பிராண வாயுவா
தார வுயிர் தம் தொகுதல் பயப்பன் – றுறைந்த மற்ற
தனிற்றங்குதலனைய தீசயமென்பதை யுணர்ந்தங் –
கறங்கு நீர்க் கங்கைக் காசி மாநகரை யொருவுதல் கடி
மடனமாலோ

என்றும் பாசரங்கள் தடை செய்வதால் வராஇய
லாதவனாயினேன்.

சங்கேதகம்

பூர்வகாண்டம் - 4 வது. யோகநிலையுரைத்த அ-ம். 33 வது. செய்யுள்

பிறையின் வடிவாய் வெண்ணிறமாய்ப் பேசும் வகாரவ
முத்துடைத்தாய் – நிறைய படலத்துறாய் மார்பன் கடவுளா
கநவையின்றி – யுறையுமிடத்திலிங்கிதனமைத்தல்
சலதாரணையென்ன – மறைதேர் முனிவர் மன்றுயிரின்
மம்மர் தீர வகுத்தனரால்.

இச் செய்யுளுக்கு முன்றும் பின்னுமுள்ள செய்யுட்களில்,
பிருதிவி தாரணை இதயத்திலும், தேயுதாரணை உண்ணாக்கின்மேற்
திரிகூடம், வாயு தாரணை புருவ நடுவிலும், ஆகாயதாரணை பிரம
ரந்திரத்திலுந் தரிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது.
இச்செய்யுளிற் கூறியிருக்கும் அப்புத் தாரணை தரிக்க வேண்
டிய இடமாகிய, உறையுமிடமென்பது, இதயத்திற்கும்
உண்ணாக்கிற்கும் மத்தியிலுள்ள இடமென்பதுவாகுங்
கொல்லோ. இதர யோகநூல்களில் தாரணை வேறுவாதமாகக்
கூறப்பட்டிருக்கின்றன.

அசல்

11.1.23 நாகலிங்கத் தம்பிரான்

அசல் — 1

த. 161

உத்தரகாண்டம் - 97-வது கேதாரதீர்த்தப்படலம் - அடி
68-69-வது செய்யுட்கள்.

இருள்படப் பொதுளு மிளமரச் சோலையினை மருது
சூழ் மதங்கேசத் - தருள்புரி சிந்தேச் சரணியற் பாசபாணி
யாங்கணத்துறை யமரும் - பொருவரு காளாங்குச் சாத்துறை
நீலகண்டமா விலிங்கமால் போற்றக் - கருணைகூர் கடந
ந்தனென்றுரைக்குங் கணத்தருக்குநந்தையன் றே

அசைசகணைத் தென்றல் முருகுயார்த்துலவு மகன்பவனக்
காசமீரத்தின் - விசயநலிங்கமுயர் கிரீசன்னை பூர்த்த
சோசரணை விளங்கி - யிசைபடு மிலிங்கமிலகுகூர் மா
ண்ட கணத்துறை யிருந்தமுக்கணனும் - வசையில்பேரி
லிங்கந் திரிசந்தவிட்டன் கூர்முக்கணனுறை வதிந்த
துவே. இச்செய்யுட்களில் கணம் என்பதற்குப் பொருள்
விளங்கவில்லை. மேலும் 69-வது செய்யுளில் 4வது அடி
சரியாய்ப் பாடம் தோன்றவில்லை. ஆதலால் சுவாமிகள் இச்சந்
தேகங்களைத் தீர்த்து அடியேனது மனோபீஷ்டத்தை நிறைவே
ற்றுவதுடன் - சுவாமிகளுக்கு அடியேன் இவ்வளவு இடை
ஞ்சல் கொடுத்த குற்றத்தை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன். (87)
குரு - ஞானசம்பந்தர் துதியும் வித்தியாகுரு வணக்கமும்
இரண்டாவது இயற்றியதை இதுடன் அனுப்பியிருக்கும் காகி
தப்புத்தகத்தில் பின்பு நூலுக்கு ஏற்றதாகுமென்றால் சுவாமிகளுக்குத் திரு
ப்திகரமான செய்யுளாக்கியருளப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் - நாகலிங்கத் தம்பிரான்.
குமாரசாமி மடம்.
கேதாரகட்டம் - ஸ்ரீ காசி

தி. க. ப. 321-327.